ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ගෘහ ආර්ථික විද්‍යාව I
மனைப் பொருளியல் I
Home Economics I

28 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

**1.** சிறிய வகுப்பறையொன்றின் இடைவெளியை பெரிதாக்கிக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான நிறம் என்ன?
(1) சாம்பல் நிறம் (2) ஊதா நிறம் (3) மஞ்சள் நிறம்
(4) வெள்ளை நிறம் (5) செம்மஞ்சள் நிறம்

**2.** சமதள மேற்பரப்பொன்றின் காட்சி அமைப்பை வேறுபடுத்தக்கூடிய முறையாவது
(1) பல்வேறு கோலங்களைப் பயன்படுத்தல்
(2) ஈரப்பதனைக் கட்டுப்படுத்தல்
(3) வெப்பநிலையை மாற்றுதல்
(4) மென்மையான மேற்பரப்பை பயன்படுத்துதல்
(5) வெளிச்சத்தைக் குறைத்தல்

**3.** வீடொன்றில் மீள்வரும் சந்தத்தை நிர்மாணிப்பதால் காட்டப்படுவது,
(1) சிக்கல் தன்மையாகும்.
(2) தொடர்ச்சியான தன்மையாகும்.
(3) சமச்சீரின்மையாகும்.
(4) குறைவான வெளி என்பதனையாகும்.
(5) ஒழுங்கற்ற தன்மையாகும்.

**4.** பின்வரும் விடயங்களைக் கருதுக
A - காபன் அடிச்சுவடு அதிகரித்தல்
B - சூழலின் வெப்பம் கட்டுப்படுதல்
C - வரையறையில்லாத செலவு
D - மீள் பிறப்பிக்கக்கூடியதாக இருத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுள் பழைய கட்டட நிர்மாணிப்பின்போது சூழலில் காணப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதன் விளைவு / விளைவுகளாவன
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) B, C ஆகியன மாத்திரம்
(4) C, D ஆகியன மாத்திரம் (5) A, B, D ஆகியன மாத்திரம்

**5.** விலங்குகள் மற்றும் தாவரங்களின் சக்தியை களஞ்சியப்படுத்தும் பொலிசக்கரைட்டுகள் ஒழுங்குமுறையில் அமைந்த விடை எது?
(1) கிளைக்கோசன் மற்றும் செலுலோசு
(2) கிளைக்கோசன் மற்றும் மாப்பொருள்
(3) மாப்பொருள் மற்றும் செலுலோசு
(4) மாப்பொருள் மற்றும் கிளைக்கோசன்
(5) செலுலோசு மற்றும் கிளைக்கோசன்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



6. அனைத்து அத்தியாவசிய அமினோ அமிலங்கள் மற்றும் பல்நிரம்பாக் கொழுப்பு அமிலங்கள் அதிகமாக அடங்கியுள்ள உணவைத் தெரிவுசெய்க.
(1) பாசிப் பயறு (2) சோயாமீற் (3) நிலக்கடலை
(4) மீன் (5) கோழி இறைச்சி

7. பின்வரும் சேர்வைகளைக் கருதுக.
A - கெரற்றீன் B - ஈமோகுளோபின் C - மயோசின் D - கோட்டிசோன்
மேலே காட்டப்பட்டுள்ள சேர்வைகளுள் புரதச் சேர்வையானது
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, D ஆகியன மாத்திரம் (3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) A, C, D ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகிய மாத்திரம்

8. சுகதேகி ஒருவரின் நாளாந்த சக்தித் தேவையில் புரதம் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய அளவானது
(1) 1% - 5% இக்கு இடைப்பட்டதாகும்.
(2) 10% - 15% இக்கு இடைப்பட்டதாகும்.
(3) 30% - 40% இக்கு இடைப்பட்டதாகும்.
(4) 45% - 50% இக்கு இடைப்பட்டதாகும்.
(5) 50% - 65% இக்கு இடைப்பட்டதாகும்.

9. இலங்கைப் பிள்ளைகளிடையே பரவலாகக் காணக்கூடிய நுண்போசணைக் குறைபாட்டு நோய் நிலைமை இரண்டைக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) குருதிச் சோகை, மெலிந்த தன்மை
(2) தைரொக்சின் குறைபாடு, குருதிச்சோகை
(3) மெலிந்த தன்மை, என்பு விகார நோய்
(4) பீற்றோ புள்ளிகள், விற்றமின் C குறைபாடு
(5) வளர்ச்சி குன்றுதல், மராஸ்மஸ்

10. உணவுக் கால்வாய்த் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - வாயினுள் கார ஊடகம் காணப்படுதல்
B - இரைப்பையினுள் அமில ஊடகம் காணப்படுதல்
C - பெருங்குடலினுள் அமில ஊடகம் காணப்படுதல்
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகியன அனைத்தும்

11. போசணைப் பிரச்சனையை தடுத்தலுடன் தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனமொன்று ஒழுங்கு முறையில் அமைந்த விடையைத் தெரிவுசெய்க
(1) உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக வங்கி
(2) கல்வி அமைச்சு, தேசிய சுகாதாரவியல் நிறுவனம்
(3) மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சர்வோதய இயக்கம்
(4) விவசாய அமைச்சு, குடும்ப சுகாதார பணியகம்
(5) போசணையாளர்களின் சங்கம், யுனெஸ்கோ அமைப்பு

12. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) உணவின் அளவு என்பது நாளொன்றுக்கு தனிநபர் ஒருவர் உண்ண வேண்டிய உணவுத் தொகுதியின் அளவாகும்.
(2) போசணை அட்டவணையில், சமைக்கப்படாத 100 கிராம் உணவில் அடங்கியுள்ள போசணை அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.
(3) ஒருவர் உட்கொள்ளும் உணவின் அளவு நபருக்கு நபர் வேறுபடும்.
(4) உணவுத் தட்டு எண்ணக்கருவிற்கு பாலும் பாலுற்பத்திப் பொருட்களும் சேர்த்துக்கொள்ளப்படுவது அத்தியாவசியமாகும்.
(5) உணவுக் கூம்பகத்தில் ஏழு வகையான உணவுத் தொகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

13. பின்வரும் போசணைகளைக் கருத்தில் கொள்க.
A - காபோவைதரேற்று B - புரதம் C - விற்றமின் $B_{12}$ D - கல்சியம்
உழைப்பு இல்லாது வளர்ந்த ஒருவர் முதுமையடையும்போது மாற்றக்கூடாத போசணைக் கூறு எது?
(1) A, B ஆகியன மாத்திரம் (2) C, D ஆகியன மாத்திரம் (3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம்

**14.** மந்த போசணையால் பீடிக்கப்பட்டுள்ள வயது வந்த ஒருவரின் சிறந்த போசாக்கிற்கு மிகவும் பொருத்தமான காலை உணவு வேளை அடங்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) காய்கறி சான்வீச்சும் சோயாப் பாலும்
(2) பனிஸும் வாழைப்பழமும்
(3) பேஸ்ட்ரியும் பால் தேநீரும்
(4) வெண்ணெய் பூசிய பாணும் பழப்பானமும்
(5) மரவள்ளிக் கிழங்கும் உப்பு மிளகாய் சம்பலும்

**15.** கீழே தரப்பட்டுள்ள நோய்நிலைமை மற்றும் உணவுகள் என்பவற்றில் நோய்நிலைமைக்கு பொருத்தமான உணவு வகையைக் குறிப்பிடும் தெரிவைத் தெரிவுசெய்க.
(1) உயர் குருதி அழுத்தம் - வெண்ணெய்க் கட்டி(சீஸ்)
(2) நீரிழிவு - பச்சையரிசி
(3) இதயநோய் - கோதுமை மா
(4) இரைப்பை அழற்சி - ஐஸ்கிரீம்
(5) பக்கவாதம் - சிறிய மீன்

**16.** பின்வரும் உணவுகளுள் மிகைநிரப்பு உணவாக சிறு பிள்ளைக்கு மிகப் பொருத்தமானது எது?
(1) பாசிப்பயறு பாற்சோறு
(2) பச்சை கரட் சலாது
(3) பாணி ஊற்றப்பட்ட யோகட்
(4) முட்டைக் கோப்பி
(5) வனிலா சுவையூட்டப்பட்ட பால்

**17.** சமையல் முறையுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - குறுகிய காலத்தில் சமையல் நடைபெறும்.
B - சமைப்பதற்கு மீன் மற்றும் இறைச்சி பயன்படுத்தப்படும்.
C - இரண்டு வெப்ப மூலங்களுக்கிடையில் சமைக்கலாம்.
D - மூன்று வெப்ப இடமாறல் முறைகளும் பயன்படுத்தப்படும்.
கிறில் செய்தலுடன் தொடர்புடைய சரியான கூற்று
(1) A, B ஆகியன மாத்திரம் ஆகும்.
(2) A, C ஆகியன மாத்திரம் ஆகும்.
(3) A, C, D ஆகியன மாத்திரம் ஆகும்.
(4) B, C, D ஆகியன மாத்திரம் ஆகும்.
(5) A, B, C, D ஆகியன அனைத்தும் ஆகும்.

**18.** பின்வருவனவற்றுள் உணவுத் தொற்றுக்கு காரணமான பற்றீரியா எது?
(1) ஸ்ரேப்ரோகோகாஸ் தாமோபிலாஸ் (Streptococcus thermophilus)
(2) பீடியோகொகஸ் செரிவிசியே (Pedococcus cerivevisiye)
(3) விப்ரியோ கொலரா (Vibrio cholera)
(4) குலொஸ்ரீடியம் பொட்டியுலினம் (colostrum botulinum)
(5) அசிரோபக்டர் அசிறிட் (Acetobacter acetic)

PAST PAPERS WIKI

**19.** ஆழ் குளிரேற்றலுடன் தொடர்புடைய **பிழையான** வாக்கியத்தை தெரிவுசெய்க.
(1) மெதுவாக நடைபெறும் ஆழ் குளிரேற்றலின் போது நுண்ணுயிர் வளர்ச்சி தடைப்படும்.
(2) நீரில் கரையக்கூடிய விற்றமின்கள் பாதுகாக்கப்படும்.
(3) உணவில் அடங்கியுள்ள நொதியங்கள் செயற்றிறனுடன் காணப்படும்.
(4) துரித ஆழ் குளிரேற்றலின் போது உணவில் அடங்கியுள்ள சில பொருட்கள் வெளியில் கசியும்.
(5) கொழுப்பு ஒக்சியேற்றம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

**20.** பிரப்பியொணெட் மற்றும் பராபென்சோலேற்று ஆகிய இரசாயன சேர்வைகளை பயன்படுத்துவதன் மூலம் நற்காப்புச் செய்யப்படும் இரண்டு உணவு வகைகள் முறையே.
(1) பேக்கரி உற்பத்தி மற்றும் ஜாம் ஆகும்.
(2) இறைச்சி மற்றும் பழக் கூழ் ஆகும்.
(3) பால்மா மற்றும் இனிப்பு பண்டங்கள் ஆகும்.
(4) குளிர்பானங்கள் மற்றும் வெண்ணெய்க்கட்டி ஆகும்.
(5) எலுமிச்சைப் பழம் மற்றும் உலர்த்தப்பட்ட காய்கறிகள் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**21.** பின்வருவன உணவு நற்காப்பின்போது பயன்படுத்தப்படும் வெப்ப சிகிச்சை முறையுடன் தொடர்புடைய சில கூற்றுகள் ஆகும்.

A - பொதியிடப்பட்ட உணவுகளுக்கு பயன்படுத்தப்படும்.
B - $130^0C$ - $150^0C$ வெப்பநிலையில் உணவுகள் சில நிமிடங்கள் வைக்கப்படும்.
C - உணவுகளை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்க முடியும்.
D - வெப்பத்தின் மூலம் உணவில் ஏற்படும் பாதிப்பு குறைவடையும்

மேலுள்ள கூற்றுகளில் உயர்வெப்ப முறையுடன் தொடர்புடையவை,

(1) A, B ஆகியனவாகும். (2) A, D ஆகியனவாகும். (3) B, C ஆகியனவாகும்.
(4) A, C, D ஆகியனவாகும். (5) B, C, D ஆகியனவாகும்.

**22.** குழம்பாக்கி மற்றும் கட்டியாக்கி என்பவைஒழுங்குமுறையில் அமைந்த தெரிவைத் தெரிவுசெய்க.

(1) காமைன் மற்றும் ஏகார் ஆகும்.
(2) சோடியம் பொசுபேற்று மற்றும் பெக்டின்.
(3) சோடியம் பொசுபேற்று மற்றும் காமைன்
(4) டாட்ரசீன் மற்றும் ஏகார்
(5) டாட்ரசீன் மற்றும் பெக்டின்

**23.** ஓவர்லொக் தையலுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க

(1) முகப்பு அலங்காரம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.
(2) ஆடையில் சரியான பக்கத்திலும் பிழையான பக்கத்திலும் ஒரு மாதிரியாகத் தெரியும்.
(3) இரு துணிகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
(4) விளிம்பை நேர்த்தியாக்கல் முறையாகப் பயன்படுத்தப்படும்.
(5) தற்காலிகத் தையலாக பயன்படுத்தப்படும்.

**24.** பின்வருவனவற்றுள் வணிகத் தையல் முறைகள் தொடர்பான சரியான கூற்று எது?

(1) 201 தையல் வகைகளில் ஒன்றான கைத்தையல், இரண்டு துணிகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
(2) சாதாரண சங்கிலித் தையல் 300 தையல் வகைகளுள் அடங்கும்
(3) லொக்தையல் 103 தையல் வகைகளுள் அடங்கும்.
(4) மறைப்புத் தையல் தைத்து இறுதியில், தையல் பிரிந்து செல்வதைத் தடுப்பதற்கு நூல் துண்டொன்று மீதப்படுத்தப்படும்
(5) தனி நூல் சங்கிலித் தையல் இணைப்பிகளைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

**25.** பின்வருவன இல்லத்தளபாடவணி நிர்மாணத்துடன் தொடர்புடைய சில விடயங்கள் ஆகும்.

A - மேசை விரிப்பிற்கு மெல்லிய இழைகளைக் கொண்ட பருத்தி துணி மிகவும் பொருத்தமானதாகும்.
B - வட்ட வடிவமான மேசை விரிப்பொன்றை நிர்மாணிக்கும்போது, அது மேசையின் விட்டத்தை விட 3 சென்றி மீற்றர் விடுவெளிவிட்டு வெட்டிக் கொள்ள வேண்டும்.
C - எம்பிரொயிடர் அலங்காரங்களை தைக்கும்போது நூல்களின் தடிப்பிற்கேற்ப ஊசிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.

இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A, B ஆகியன மட்டும் (5) B, C ஆகியன மட்டும்

**26.** அடிப்படை தையல் முறையொன்றும் நுட்பத் தையல் முறையொன்றும் ஒழுங்கு முறையில்,

(1) அப்லிக் செய்தல் மற்றும் மேல்மடிப்புத் தையலாகும்.
(2) நூலோடுதல் மற்றும் தையற்காரன் தையலாகும்.
(3) தையற்காரன் தையல் மற்றும் இணைப்பிகளைப் பிடித்தலாகும்.
(4) மேல்மடிப்புத் தையல் மற்றும் அப்லிக் செய்தலாகும்.
(5) இணைப்பிகளைப் பிடித்தல் மற்றும் நூலோடுதலாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**27.** நார் வகையொன்றின் குறுக்குப்பக்க நுணுக்குக்காட்டி கட்டமைப்பு பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. இந்த நார்வகை



(1) பட்டு ஆகும். (2) கம்பளி ஆகும். (3) விஸ்கோசாகும்.
(4) நைலோன் ஆகும். (5) பொலியெஸ்ரர் ஆகும்.

**28.** துணிகள் மற்றும் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நேர்த்திகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நீர்புகா நேர்த்தி முறையுடனான துணிகள் நுண்துளைகளற்றவை.
(2) செலுலோசு அடங்கியுள்ள நார்களினால் நேர்த்தியாக்கப்பட்ட துணிகளுக்கு தீயெதிர்ப்பு நேர்த்தியை வழங்க முடியாது.
(3) கழுவுதல் என்றால் நார்களில் இயற்கையாகக் காணப்படும் கழிவுகளை, கிறிஸ், மெழுகு, நீர்த்த அமிலங்களைப் பயன்படுத்தி அகற்றுதலாகும்.
(4) நொதியங்களைப் பயன்படுத்தி தைத்த ஆடைகளைக் கழுவுவதால் அவற்றின் வர்ணங்களின் செறிவு அதிகரிக்கும்.
(5) துணிகளை நெசவு செய்த பின்பு மேலும் இரசாயன செயற்பாடுகளுக்கு உட்படுத்துவதற்கு முன்பு ஊடு நூல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் நார்களை அகற்ற வேண்டும்.

**29.** **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தாவரங்களின் செலுலோசு மூலக்கூறை வேறுபடுத்தி மீள ஒழுங்குபடுத்துவதன் மூலம் மீள்பிறப்பிக்கத்தக்க செலுலோசு நார் தயாரிக்கப்படுகிறது.
(2) செயற்கை நார் உற்பத்தியின்போது, பொலிமர் பொருட்களை வெப்பமேற்றி, கரைசலாக்க முடியுமென்றால், 'கரைசல் முறை நூற்றலைத்' தெரிவுசெய்தல் வேண்டும்.
(3) செயற்கையாக தயாரிக்கப்பட்ட சில நீண்ட நார்களை ஒன்று சேர்த்து முறுக்குவதன் மூலம் நூலொன்று தயாரிக்கப்படுகிறது.
(4) பாவு நூல்கள் இரண்டையும் ஊடை நூல்கள் இரண்டையும் ஒன்றாகக் கட்டுவதால் பாய் நெசவு நிர்மாணிக்கப்படுகிறது.
(5) நெடு நூல் பின்னலுடன் கூடிய துணிகளில் இழுபடும் இயல்பு குறைவாகும்.

**30.** பின்வருவன சட்டகத்தையொட்டி பாவாடை மாதிரியுருவை நிர்மாணிப்பது தொடர்பான சில வாக்கியங்கள் ஆகும்.
A - மாதிரியுருவில் இடைக்கான கோடு கிடைக்கோடாக அமைந்துள்ளது.
B - மாதிரியுருவை நிர்மாணிக்கும்போது நியமப்பட்ட அளவீடாக இடைக்கான தையல் விடுவெளி 0.25 சென்ரி மீற்றர் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.
C - இடையில் இருந்து இடுப்பு வரையிலான உயரம் இடுப்புயரமாகும்.
D - சட்டகத்தை இரண்டு சமமான பகுதிகளை பிரிப்பதன் மூலம் பக்கக்கோடு அடையாளப்படுத்தப்படுகின்றது.
இவற்றுள் சரியான வாக்கியம்,
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம்
(3) B, D ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) B, C, D ஆகியன மாத்திரம்

**31.** தகவல் பரிமாற்றல் ஊடகமொன்றின் நம்பகத்தன்மையைக் குறைக்கும் ஒரு காரணி
(1) தகவல்களின் துல்லியத் தன்மை
(2) மொழியைக் கையாளும் திறன்
(3) அதிக நேயர்களின் எண்ணிக்கை
(4) தொழினுட்பத்தின் தரம்
(5) பக்கச்சார்பற்ற அறிக்கையிடல்

[பக். 6 ஐப் பார்க்க

**32.** பின்வரும் நிகழ்வுகளில் எது சமூக நிகழ்வொன்றில் பொருத்தமான முறையில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் முறையை **தவறாகக்** காட்டுகிறது?
(1) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆடை அணிகளின் நிறங்கள் பொருந்துதல்
(2) சமூக மரபுகளை கவனத்தில் கொள்ளல்
(3) அழகையும் மதிப்பையும் எடுத்துக்காட்டும் வகையிலான தோற்றப் பொலிவு
(4) வசதி மற்றும் மரியாதையின்பால் அக்கறை காட்டுதல்
(5) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அலங்காரப் பாணியைத் தெரிவுசெய்தல்

**33.** ஓய்வு மற்றும் இன்ப பொழுதுபோக்கு தொடர்பான கூற்றுகள் சில பின்வருமாறு
A - ஒருவர் சுறுசுறுப்பான ஓய்வுச் செயற்பாடுகளுக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டும்.
B - இன்ப பொழுதுபோக்கு செயற்பாடுகளை, ஓய்வை கழிப்பதற்கு மட்டுமே தெரிவு செய்யப்படும்.
C - தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதை வளர்ச்சி அடைதல், சாதகமான நன்மைகள் ஆகும்.
D - விஷேட செயற்பாடுகளில் ஈடுபடுவோருடன் பழகுவதற்கான வாய்ப்பு இன்பப் பொழுது போக்கின் முக்கியத்துவமாகும்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, D ஆகியன மாத்திரம் (5) C, D ஆகியன மாத்திரம்

**34.** மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட ஈர்ப்புகளுக்கான இரண்டு உதாரணங்கள்
(1) கோள் மண்டலமும் களனி பெரஹெரவும் ஆகும்.
(2) யால சரணாலயமும் தம்புள்ளை விகாரையும் ஆகும்.
(3) காலிக் கோட்டையும் சிங்கராஜா மழைக்காடுகளும் ஆகும்.
(4) ஹோட்டன் சமவெளியும் காலிக் கோட்டையும் ஆகும்.
(5) சிங்கராஜா மழைக்காடுகளும் ஹோட்டன் சமவெளியும் ஆகும்.

**35.** சுற்றுலா தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க
(1) சுற்றுலாத் துறையின் கீழ்வரும் பயணங்களை இனங்காண்பதற்கு இரண்டு பரிமாணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(2) அரசிற்கு மேலதிகமாக வரி வருமானம் கிடைப்பது, சமூகத்திற்கு கிடைக்கும் நன்மையாகும்.
(3) உள்வாரிச் சுற்றுலாவானது, தேசிய சுற்றுலா மற்றும் வெளியே விருந்தினராகச் செல்லும் சுற்றுலாக்களை உள்ளடக்கியது.
(4) கூட்டமாகச் செல்லும் சுற்றுலாவின்போது குடும்பம் அல்லது சிறு குழுக்கள் சுற்றுலாவில் ஈடுபடும்.
(5) வனப்பூங்காக்களை பார்வையிடச் செல்லல் சூழல்சார் சுற்றுலாவிற்குரியதாகும்.

**36.** சுற்றுலாவுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - சுற்றுலாவின் மூலம் சூழலுக்கு நேர்மறையான தாக்கமும் எதிர்மறையான தாக்கமும் ஏற்படுகிறது.
B - புட்டிக் ஹோட்டல்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் கேள்வி குறைவாகும்.
C - ஹோட்டல்கள், சுற்றுலா முகவர்கள், தங்களது சேவைகள் தொடர்பான விவரங்களை இணைய வழியாக பிரச்சாரம் செய்தல் ஒரு பிரபலமான ஊடக செயற்பாடாகும்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C ஆகியன மாத்திரம்
(4) A, C ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

**37.** நீர் நுகர்வு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?
(1) புவி மேற்பரப்பில் உள்ள நீரில் 8% மட்டுமே மனித நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகிறது.
(2) நீரில் வாழும் பல்வேறுவகையான பற்றீரியாக்களைக் கணக்கிடுவதன் மூலம் பருகுவதற்கான நீரின் பொருத்தப்பாடு நிர்ணயிக்கப்படுகிறது.
(3) குளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நீரில் உயிர்ப்புடனான பற்றீரியாக்கள் அடங்கியுள்ளன.
(4) விலங்குகளின் மலங்கள் நீரில் கலப்பதால் ஏற்புவலி, இளம்பிள்ளைவாதம் மற்றும் தொண்டை அடைப்பான் போன்ற நோய்கள் ஏற்படக்கூடும்.
(5) வீட்டு உபயோகப் பொருட்களுக்கு நீர் வழங்குவதற்கு 25 mm விட்டமுள்ள குழாய்கள் பொருத்தமானவை.

[பக். 7 ஐப் பார்க்க

**38.** பின்வரும் வீட்டு மின்சுற்றின் பாகங்களில் நுகர்வோருக்குச் சொந்தமானவை,
(1) மிகை கடத்து சுற்றுடைப்பான் மற்றும் மின் விநியோகப் பெட்டி
(2) மின்மானி மற்றும் தனியாக்கி
(3) தனியாக்கி மற்றும் மின் விநியோகப் பெட்டி
(4) மிகை கடத்து சுற்றுடைப்பான் மற்றும் மின்மானியாகும்.
(5) மின் விநியோகப் பெட்டி மற்றும் மின்மானியாகும்.

**39.** வீட்டு மின் விநியோகத்துடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்று எது?
(1) மின்கலத்திலிருந்து ஆடலோட்ட மின்சாரம் பெறப்படுகிறது.
(2) செருகியுடன் இணைக்கப்பட்டுள்ள நடுநிலைக் கம்பி நீலநிறமாகும்.
(3) மின்னோட்டத்தை அளக்கும் நியம அலகு ஓம் ஆகும்.
(4) LED மின் விளக்கு பயன்படுத்தும் மின் சக்தி அளவு பொதுவாக 15w, 22w ஆகும்.
(5) உலோகப் பாகங்களைக் கொண்ட மூடியுடனான மின்சாதனங்களுக்கு இரு முனை செருகியைப் பயன்படுத்தலாம்

**40.** பின்வரும் சக்தி மூலங்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் மற்றும் புதுப்பிக்க முடியாத சக்தி மூலங்கள் ஆகியவற்றை ஒழுங்கு முறையில் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) சூரிய ஒளி மற்றும் இயற்கை எரிவாயு
(2) மசகு எண்ணெயிலிருந்து பெறப்படும் எரிபொருள் மற்றும் சூரிய வெப்பம்
(3) கடல் அலைகள் மற்றும் சூரிய ஒளி
(4) மசகு எண்ணெயிலிருந்து பெறப்படும் எரிபொருள் மற்றும் கடல் அலைகள்
(5) இயற்கை எரிவாயு மற்றும் சூரிய வெப்பம்

**41.** இயற்கை வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதால் **உருவாகாத** ஒரு நிலைமை
(1) சுற்றாடல் சமநிலை பாதுகாக்கப்படுதல் ஆகும்.
(2) உயிர்ப்பல்வகைமை ஏற்படுதல்
(3) வளப் பற்றாக்குறை ஏற்படாமை.
(4) இயற்கை மாற்றங்களில் சமநிலையின்மை ஏற்படுதல்
(5) பொதுச்சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்

**42.** பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்க.
A - பூரணமற்ற தகனம் நடைபெறுதல்
B - பூரண தகனம் நடைபெறுதல்
C - நச்சு வாயுக்கள் உற்பத்தியாதல்
மேலுள்ள விடயங்களில் குறைந்த வெப்பநிலையில் கழிவுப் பொருட்களை எரிப்பதால் பெருமளவில் ஏற்படக்கூடிய விளைவு / விளைவுகள்
(1) B மாத்திரம் ஆகும். (2) C மாத்திரம் ஆகும்.
(3) A, B மாத்திரம் ஆகும். (4) A, C ஆகியன மாத்திரம் ஆகும்.
(5) B, C ஆகியன மாத்திரம் ஆகும்

**43.** கூட்டுப்பசளை தயாரிக்கும்போது அடிக்கடி புரட்டுதல் மிகவும் முக்கியமாவது
(1) உள்ளடங்கியுள்ள நீரை குறைப்பதற்காகும்.
(2) வெப்பநிலையைக் குறைப்பதற்காகும்.
(3) காற்றோட்டத்தை அதிகரிப்பதற்காகும்.
(4) கழிவுகளை பிரிப்பதற்காகும்
(5) துர்நாற்றத்தை தடுப்பதற்காகும்

**44.** திண்மக் கழிவுகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும்?
(1) திறந்தவெளியில் எரித்தல்
(2) கழிவு அகற்றுவதற்கான இட வசதியை கட்டுப்படுத்தல்
(3) மூடிய இடத்தில் எரித்தல்
(4) திறந்தவெளியில் குவித்து வைத்தல்
(5) திண்மக் கழிவுகளை மிக நெருக்கமாக அடுக்குதல்

[பக். 8 ஐப் பார்க்க

**45.** கட்டிளமைப் பருவத்துடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்க.

A - பெண் பிள்ளைகளின் கட்டிளமைப் பருவத்தின் ஆரம்பம் பொதுவாக 10 வயதின் பின்பு நிகழ்கிறது

B - ஆண் பிள்ளைகளின் கொழுப்பு மற்றும் தசைத் திசுக்களின் வளர்ச்சி வேகமாக காணப்படும்.

C - ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் உயர வளர்ச்சி ஒரே வயதில் ஆரம்பமாகிறது.

D - கட்டிளமைப் பருவத்தினர், முதிர்ந்த இனப்பெருக்க உயிரணுக்களை தங்கள் உடலில் சேமித்து வைக்கின்றனர்.

இவற்றுள் சரியான விடயம் / விடயங்கள்

(1) A மாத்திரம் ஆகும்.
(2) C மாத்திரம் ஆகும்.
(3) A, C ஆகியன மாத்திரம் ஆகும்.
(4) B, D ஆகியன மாத்திரம் ஆகும்
(5) A, B, D ஆகியன மாத்திரம் ஆகும்.

**46.** பின்வரும் கூற்றுகளில் கட்டிளமைப் பருவ அபிவிருத்தியுடன் தொடர்புடைய **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க

(1) குழந்தைப் பருவத்துடன் ஒப்பிடும்போது, உடல் வளர்ச்சி வேகத்தில் ஒத்த தன்மையைக் காட்டுகின்றது
(2) சமூக சட்டதிட்டங்களை மாற்றுவதற்கு விருப்பம் தெரிவிப்பார்கள்
(3) தூல சிந்தனைத் திறனை வளர்த்துக்கொள்வார்கள்
(4) சில சந்தர்ப்பங்களில் முன் பிள்ளை பருவத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவர்
(5) மொழி வளர்ச்சி மற்றும் நுண்ணறிவு வளர்ச்சியில் இடைத்தொடர்பைக் காட்டுவர்

**47.** கட்டிளமைப்பருவ வயதினர் காட்டும் மனவெழுச்சி, அறிகைசார் மற்றும் சமூகப் பண்புகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) கோபாவேசம், சபைக் கூச்சம், பொதுநலம்
(2) தீர்மானம் மேற்கொள்ளுதல், பொறுமை, உணர்ச்சிவசப்படுதல்
(3) கோபாவேசம், பொதுநலம், தர்க்கித்தல்
(4) பொறுமை, சபைக்கூச்சம், தீர்மானம் மேற்கொள்ளுதல்
(5) உணர்ச்சி வசப்படுதல், தர்க்கித்தல், பொறுமை

**48.** பின்வருவனவற்றுள் ஆளுமை தொடர்பான கூற்றுகளுள் கவரன் அறிமுகப்படுத்திய முறை எது?

(1) ஆளுமை பரம்பரையினதும் சுற்றுச்சூழலிலினதும் பரஸ்பர தாக்கத்தினால் ஏற்படுவதாகும்.
(2) ஆளுமையினுள் உடல், உளம் சார்ந்த பண்புகள் உள்ளடங்கியுள்ளன.
(3) ஆளுமை தனிநபரின் அடையாளத்தைக் காட்டும்.
(4) ஆளுமை என்பது ஒவ்வொரு தனியாளிடமும் காணப்படுவதாகும்.
(5) ஆளுமையை அபிவிருத்தி செய்ய முடியும்.

**49.** முயற்சியாண்மையுடன் தொடர்புடைய **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) இடர்களை ஏற்றுக்கொள்ளல் முயற்சியாண்மையாளர் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்பாகும்.
(2) வணிக வாய்ப்புகளை இனங்காணல், முயற்சியாண்மைக்கான பிரதான செயற்பாடாகும்.
(3) எதிர்காலம் பற்றிய சிந்தனை என்பது முயற்சியாளரொருவரிடம் பிறப்பிலேயே இருத்தல் வேண்டும்.
(4) அனுபவம், அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை முன்னேற்றுவதன் மூலம் முயற்சியாண்மை விருத்தியடைகிறது.
(5) வணிகமொன்றை நடாத்தும்போது சமூகப் பொறுப்புகளைக் கடைப்பிடித்தல் முக்கியமானதாகும்.

**50.** சிற்றளவிலான வணிகத்துடன் தொடர்புடைய சில கூற்றுகள் பின்வருமாறு

A - உற்பத்திகளுக்கு உயர் அங்கீகாரம் வழங்குவதற்கு ISO மற்றும் HACCP ஆகிய இரு தரச் சான்றிதழ்கள் முக்கியமானதாகும்.

B - அனைத்து வணிகச் செயற்பாடுகளையும் சட்டங்கள் பிரமாணங்கள் மூலம் கட்டுப்படுத்தல் கடினமானது.

C - சிறந்த முகாமைத்துவ உத்திகளைப் பின்பற்றுவதால் சிற்றளவிலான வணிகத்தில் உயர்தரத்திலான கட்டுப்பாட்டை அணுக முடியும்.

இவற்றுள் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

***

Past Papers Wiki

4930

AL/2026/28/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ගෘහ ආර්ථික විද්‍යාව II
மனைப் பொருளியல் II
Home Economics II

28 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ **முதலாம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்குக.

**1.** (i) புதிய வடிவமைப்பின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய **இரண்டு** பயன்பாட்டு காரணிகளை எழுதுக.

(ii) மின்சாரத்துடன் தொடர்புபட்ட சக்தியை (வலு) அறிமுகம் செய்க.

(iii) பிள்ளைகளின் சரும ஆரோக்கியத்திற்கு முக்கியமான **இரண்டு** நுண்போசணைகளைக் குறிப்பிடுக.

(iv) மிகை ஊட்டத்தை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய அளவீட்டு குறிகாட்டிகள் **இரண்டை** எழுதுக.

(v) நேர்பட்டி மற்றும் சரிவுக்கோட்டு பட்டி ஆகியவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளை எழுதுக.

(vi) வணிக தையல் முறைகளின் தோற்றம் மற்றும் செயற்பாட்டில் தாக்கம் செலுத்தும் **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(vii) இன்பப் பொழுதுபோக்கு செயற்பாட்டு வகைப்படுத்தலுக்குரிய செயற்பாட்டு தொகுதிகள் **இரண்டை** எழுதுக.

(viii) உணவில் அடங்கும் உயிரியல் தொழிற்பாட்டு கூறுகள் **இரண்டு** எழுதுக..

(ix) 'தற்போது சிறு பிள்ளைகள் இலத்திரனியல் ஊடகத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர்' இதன் தீமையான தாக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) மன அழுத்தத்திற்குள்ளான பிள்ளையொருவர் வெளிப்படுத்தும் உடல்சார் இயல்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) சரிவுக்கோடுகள் மற்றும் வளை கோடுகள் மூலம் தூண்டப்படுகின்ற உணர்வுகள் **இரண்டு** வீதம் எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) கட்டட வடிவமைப்பின்போது 'மரபுரீதியான' மற்றும் 'நவீனத்துவம்' ஆகியவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) வடிவமைப்புக் கோட்பாடுகள் **நான்கினை** விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) 'வடிவமைப்புடன் தொடர்புடைய சூழலானது பௌதிகச் சூழல், சமூகச் சூழல் பொருளாதாரச் சூழல் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.' விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**3.** (i) 'குவாசியக்கோர்' நிலைமையை அறிமுகம் செய்க. (03 புள்ளிகள்)

(ii) 'வாழ்க்கைச் சக்கரத்தின் பல்வேறு கட்டங்களில் கல்சியக் குறைபாடு ஏற்படும்' அக் கட்டங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நிலைமைகளை முறையே குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) நார்ச்சத்துள்ள உணவுகள் இதய நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு பங்களிக்கும் முறையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மலச்சிக்கலால் பாதிக்கப்பட்டுள்ள வயதுவந்த ஒருவருக்குப் பொருத்தமான நாளொன்றிற்கான உணவுப் பட்டியலைத் திட்டமிடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI
අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

4. (i) உணவு நற்காப்பை அறிமுகம் செய்க. (02 புள்ளிகள்)

(ii) நுண்ணுயிர் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் புறக் காரணிகளை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) குளிர் நிலையில் உலர்த்தல் செயன்முறையை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பார்ச்சர் முறைப் பிரயோகத்தின் நோக்கங்களைக் குறிப்பிட்டு, அதில் பயன்படுத்தப்படும் அடிப்படைச் செயன்முறைகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

5. (i) புடவை உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறையான 'நார்களைப் பொசுக்கல்' என்பதனை அறிமுகஞ் செய்க. (02 புள்ளிகள்)

(ii) 'சாதா நெசவு முறை' மற்றும் ஒழுங்கான சரிவுக்கோட்டு நெசவு' ஆகியவற்றை உருவப் படங்கள் மூலம் குறித்துக் காட்டுக. (06 புள்ளிகள்)

(iii) மனிதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற நார் வகைகளின் வகைப்படுத்தலை முன்வைத்து, அவை ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றில் ஆடைதைத்தல் வரை நடைபெறும் செயன்முறைகளில் அடங்கும் படிமுறைகள் **நான்கை** ஒழுங்கு முறையில் குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

6. (i) பசளைத் தயாரிப்பின்போது இரசாயனப் பொருட்களை அதிகமாக பயன்படுத்துவதனால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) 'உணவு உற்பத்தியின்போது வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை முக்கியமானதாகும்.' இதற்கான **நான்கு** காரணிகளை முன்வைக்குக. (04 புள்ளிகள்)

(iii) 'ஓய்வு நேரத்தை மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தல்' என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) 'இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் இளைஞர்கள்' என்பதனை கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

7. (i) பாலியல் முதிர்ச்சி என்பதனை அறிமுகம் செய்க. (02 புள்ளிகள்)

(ii) ஒருவரின் சமநிலை ஆளுமையில் முக்கியமான மனவெழுச்சி சமநிலையை வெளிப்படுத்தும் **நான்கு** பண்புகளை முன்வைக்க. (04 புள்ளிகள்)

(iii) கட்டிளமைப்பருவத்தில் உளநலப் பிரச்சினைகள் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் **நான்கு** காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கட்டிளமைப் பிள்ளையொருவரின் சுய எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதில் பாடசாலையின் வகிபாகத்தினைக் கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **நான்கிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) வாழ்க்கையின் நிலைத்திருப்புக்கு மனிதனுக்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பு

(ii) உணவு வேளையொன்றிற்கு பால் மற்றும் பாலுணவுகளைச் சேர்த்துக்கொள்ளல்

(iii) சுற்றுலாப் பயணிகளுக்காக செயற்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் சேவைகள்

(iv) கட்டிளமைப் பருவ பெண் பிள்ளைகளுக்கான பல்வேறு ஆடைப் பாணிகள்

(v) கட்டிளமைப் பருவத்தினரும் சமவயதுக் குழுவும் (04 × 4 = 16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library